முருகப்பெருமான் துணை

உலக ஞானத்தலைவன் முருகப்பெருமான் துறையூர் ஓங்காரக்குடில் ஆசான்
ஆறுமுக அரங்க மகா தேசிகருக்கு அருளிய ஞான அறிவுரை ஆசி காண்டம்

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1468

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**06.10.2023**, வெள்ளிக்கிழமை

1. பிரணவக் குடில் படைத்த அரங்கனே
   பிரணவ சக்திமிகு உயர் வழிபாட்டை
   சரவணச்சுடரேற்றி உலகோருக்கு
   சகலதுமாய் ஞானம் அருளுகின்ற தேசிகனே
2. தேசிகனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
   தெரிவிப்பேன் ஞான அறிவுரை ஆசி
   (சோபகிருது வருடம் புரட்டாசி மாதம் 19 ம் நாள், 06.10.2023, வெள்ளிக்கிழமை)
   ஆசிதந்து உன்னுள் யானிருக்க
   அரங்கன் உன் கரம்பட தீட்சைபெறும் மக்களுக்கு
3. மக்களுக்கு ஆறுமுகன் யான் மகத்துவம்பட
   மாற்றம் தருகின்றேன் ஆக்கமுடன்
   உன் தொண்டுவழி கலந்து
   அறம் தனை கடைபிடிக்கும் மக்களுக்கு
4. மக்களுக்கு சர்வபலமாய் இறங்கி
   மாற்றம்பல தந்து ஆறுமுகன் யான்
   தேக்கமின்றி அவர்கள் தொழில் தன கீர்த்தியோடு
   தெய்வீக நிலை அடைந்து உன்வழி
5. உன்வழி உலகோர் ஞானிகளாக
   உயர்வு சிறப்பு சகலதும் காண
   சண்முகனார் யான் அருள்புரிந்து வருகின்றேன்
   சடாட்சரன் உன் தீட்சை சக்திமிகு தீட்சையாகும்
6. சகலரும் சரணடைந்து ஏற்றால் போதும்
   சக்திகூடி உலகில் அவரவரும் சாற்றிடுவேன் ஞானிகளாக சிறப்பரப்பா
   அப்பனே ஞான யுகம் படைக்க
   அவதாரம் என் சக்தியாக வந்துள்ளாய்

7. ஒப்புகொண்டு உன்னுள் உலகோர்
உயர்வான சரணடைவு கொண்டுவிட்டால்
தப்பாது அவர்களெல்லாம் ஞானிகளாவர்
தரணியையே மாற்றி அற்புதம் படைப்பர்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–